விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26   மாசி 18   ஐ. [illegible] 27   இதழ் 19

யாழ்ப்பாணம்   வியாழக்கிழமை   1-3-84


## இராணுவத்தினர் திடீர்ச் சோதனை:
# பத்து இளைஞர்கள் விசாரணை

(மாவிட்டபுரம்)

அளவெட்டி, பன்னாலை, முள்ளானை ஆகிய பகுதிகளில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கடும் சோதனையைத் தொடர்ந்து பத்து இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுநள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் ஆரம்பமான இத் திடீர்ச் சோதனை, நேற்று அதிகாலை ஐந்தரை மணிவரை நீடித்தது.

திடீர்ச்சோதனை காரணமாக மக்கள் மத்தியில் பெரும் பீதியும் குழப்பநிலையும் காணப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

## ★ இப்படியும் நடக்கிறது!
## இது கதையல்ல நேற்றைய சம்பவம்!

(யாழ்ப்பாணம்)

ஸ்டான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கி இரண்டாவது அலுவலகம் முன்பாகக் கடமையிலிருந்த வங்கி பாதுகாப்பு பொறுப்பதிகாரி ஒருவரின் கைத்துப்பாக்கியை, இனம் தெரியாத இரு வாலிபர்கள் பறித்துக்கொண்டு தப்பியோடி விட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது!

நேற்று நண்பகல் இச்சம்பவம் நடைபெற்றது.

வேலணை இலங்கை வங்கிக் கிளையிலிருந்து கொள்ளையடிக்கப்பட்டு பொலிசாரால் பிடிக்கப்பட்ட இரும்புப்பெட்டியிலிருந்த பணம், யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து கொண்டு வரப்பட்டு மேற்படி ஸ்டான்லி வீதியிலுள்ள வங்கி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இப்பணம் கொண்டுவரப்படுவதற்கு யாழ். பொலிசார்

(8-ம் பக்கம் பார்க்க)

# "யுத்தத்தை நமது நாடு எதிர்நோக்குகிறது!"

## பிரதமர் எச்சரிக்கை

(பொலநறுவை)

"யுத்தம் ஒன்றை எதிர்நோக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்" என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா அச்சம் தெரிவித்துள்ளார்!

பொலநறுவை தேசிய இளைஞர் முகாமில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

"தமிழ் மக்களை அழித்து விட்டு சிங்கள மக்களை ஆட்சியில் அமர்த்தும் நோக்கம் அரசுக்கு கிடையாது" என்று தெரிவித்த பிரதமர், சிங்கள மக்களை அழித்துத் தமிழ் மக்களும் இந்த நாட்டில் ஆட்சி நடாத்த முடியாது என்றார்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"நாட்டில் நடப்பது சிங்கள-தமிழ் இனத் தகராறு அல்ல. சில தமிழர்களே தமிழர்களை வதைக்கும் நிலை. இதற்குச் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள சிலதீய சக்திகளினதும், சர்வதேசரீதியிலும் உதவி கிடைத்து

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக ஆலோசனை:
## மானியக்குழு பரிசீலனை

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல், விவசாய பீடங்களை அமைப்பது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளை பல்கலைக்கழக மானியக் குழு பரிசீலனை செய்து வருகிறது.

இப்பீடங்களை அமைப்பதற்கு நிதியுதவி வழங்குவது பற்றி திறைசேரியும் பரிசீலனை செய்யவுள்ளது.

பல்கலைக்கழக அபிவிருத்திக்கான திட்டத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியல், விவசாயப் பீடங்களை அமைக்கும் திட்டமும் அடங்கும் என்றும் உயர் கல்வியமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக

(8-ம் பக்கம் பார்க்க)

## வேலணை வங்கி இரும்புப்பெட்டிகளை மீட்ட
## பொலிசாருக்கு சன்மானம் சம்பள உயர்வு கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

வேலணை இலங்கை வங்கிக் கிளைக் கொள்ளை சம்பந்தமாகத் தகவல் கிடைத்துத், துப்பாக்கி முனையில் அதைத் தடுத்து நிறுத்தி வங்கியின் இரும்புப் பெட்டிகளை மீட்ட யாழ். பொலிஸைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் களுவாராச்சிக்கு 25 ஆயிரம் ரூபா சன்மானமும், இரு சம்பளஉயர்வுகளும் பொலிஸ் தலைமையகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

மற்றும் சார்ஜன்ட் ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா சன்மானமும், இரு சம்பள உயர்வும், பொலிசாருக்கு ரூ 5 ஆயி

(8-ம் பக்கம் பார்க்க)

## ★ வங்கிப் பெட்டிகள் திறக்கப்பட்டன!
# ஒருஇரும்புப் பெட்டியில் ரூ.6,46,110.97சதம்
# தஸ்தாவேஜுகள் 2வதுபெட்டியில் இருந்தது

(யாழ்ப்பாணம்)

வேலணை இலங்கை வங்கிக் கிளையில் கொள்ளையடிக்கப்பட்டு பொலிசாரால் மீட்கப்பட்ட இரு இரும்புப்பெட்டிகளில் பணம் வைக்கப்பட்ட இரும்புப்பெட்டி நேற்றுக்காலை திறக்கப்பட்ட போது அதற்குள் ஆறு லட்சத்து 46 ஆயிரத்து 110 ரூபா 97 சதம் இருந்ததாகக் கணக்கிடப்பட்டது.

யாழ். பொலிஸ் நிலையத்தின் முன்வளவில் வைத்து பணம் வைக்கப்பட்ட இரும்புப்பெட்டி திறக்கப்பட்டது.

யாழ். மாவட்ட வங்கி முகாமையாளர் திரு ரங்கநாதன், உதவிப் பொலிஸ் அதிபர் ரி. மனோகரன், யாழ். பொலிஸ் தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரி ரஞ்சித் சில்வா, இலங்கை வங்கி பாதுகாப்பு அதிகாரிகள், கொள்ளை அடிக்கப்பட்ட வேலணை இலங்கை வங்கிக்கிளை மனேஜர், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஞானப்பிரகாசம் ஆகியோர் முன்னிலையில் வைத்து இரும்புப்பெட்டிகள் திறக்கப்பட்டன.

இதனைத்தொடர்ந்து இரும்புப் பெட்டியும் அதற்குள்ளிருந்த பணமும், மற்றுமொரு இரும்புப் பெட்டியும் அதற்குள்ளிருந்த தஸ்தாவேஜுகளும் நேற்று நண்பகல் யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் இரண்டாவது அலுவலகத்துக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டுசென்று அங்கு வைக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனு ஒன்றின் மீது, நீதிபதி பிறப்பித்த உத்தரவின் பேரில் நேற்றுக்காலை ஊர்காவற்றுறை பொலிஸ்நிலையபொறுப்பதிகாரி நீதிமன்ற உத்தரவை யாழ். பொலிசுக்கு நேரில் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து நேற்றுக்காலை பெட்டிகள் திறக்கப்பட்டன.

கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் வாகனங்களில் லொறியும், வான் ஒன்றும் யாழ். பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்

(8-ம் பக்கம் பார்க்க)

## ● கொள்ளையிலீடுபட்ட சந்தேக நபருக்கு
# பகிரங்க 'மரண தண்டனை!
# நெல்லியடியில் சம்பவம்

(சரவெட்டி)

நெல்லியடிச் சந்தியில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச்சூடுக்குள்ளாகி, மின்கம்பத்துடன் கட்டப்பட்டிருந்தது இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது!

துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானவர், மாதகல் ஓடக்கரையைச் சேர்ந்த 25 வயதுள்ள விசுவலிங்கம் குலசிங்கம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கண்ணிலும், நெஞ்சிலும் துப்பாக்கிச்சூடுகள் காணப்பட்டது.

அங்கு காணப்பட்ட குறிப்புகளில், 'இயக்கத்தின் பெயரைக்கூறி பண்டத்தரிப்பு, மயிலிட்டி, பருத்தித்துறை, கட்டுவன் போன்ற இடங்களில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட வி. குலசிங்கத்துக்கு மரணதண்டனை அளிக்கப்படுகிறது" என்று எழுதப்பட்டிருந்தது. இதன் அடியில், சமூகவிரோதிகளுக்கு மரண தண்டனை என்று குறிப்பிடப்பட்டு 'தமிழீழவிடுதலைப் புலிகள்' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றுப்பகல் நடைபெற்ற மரணவிசாரணையில் இறந்தவரின் சடலத்தை அவரது தந்தையும், சகோதரர்களும் அடையாளம் காட்டினர்.

மாதகல் ஓடக்கரையைச் சேர்ந்த விசுவலிங்கம், பொலிசாருக்குக் கொடுத்த தகவலில், இறந்தவர் தமது மகனென்றும், 22 வயதான அவருக்கு மனநோய் இருந்ததென்றும் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனும

[8-ம் பக்கம் பார்க்க]

# யாழ். ஆஸ்பத்திரியில் முக்கிய மருந்துகள் திருட்டு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மருந்தகத்திலிருந்து பெறுமதியான முக்கிய மருந்து வகைகள் களவாடப்பட்டுள்ளதாக யாழ் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இக்களவு நடைபெற்றதாக மருந்தகப் பொறுப்பாளர் புகார் செய்துள்ளார்.

சுமார் இரு மாதங்களுக்கு முன்னரும் இம்மருந்தகத்தில் களவு போயிருந்ததாம்.

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலி தெற்கு சிவன் கோயிலடி புதுரோட்டில் முதற் காணி (வீடு கட்டக்கூடிய 6¾ பரப்பு கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு பிரித்தும் கொடுக்கப்படும் தொடர்பு: பொ. கார்த்திகேயன், சட்டத்தரணி, ஆடியபாத றோட், திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம். 1078

PL-4 டயமக் வேத் மெஷின் இருவாரத்துக்குள் விற்பனைக்கு கிடைக்கும். உங்கள் தேவைக்கு பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1019

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு ரேடியோ திருத்துவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. நேரில் வரவும். நரசிங்கம், சன் ரேடியோ சேவிஸ், பிரதான வீதி, பண்டத்தரிப்பு. 1086

## கல்வி

வயரிங், மோட்டார் மெக்கானிசம், காலை வகுப்புகள் கிழமை நாட்களில் நடைபெறுகிறது. புதிய மாணவர்கள் 2-3-84ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க: பொறியியல் கல்வி நிலையம் Engineering Education Centre புதிய மேல் மாடிக் கட்டிடம், சம்பத்தன் வைத்தியசாலைப் பக்கம். சாந்தி சினிமா அருகாமை, 82, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். விரிவுரையாளர் S. C. இம்மானுவேல், Bsc-Cey. Electrical and Automobile Enigneer. 1050

## பாடசாலை சேவை

கோண்டாவிலில் இருந்தும், உரும்பிராயிலிருந்தும் யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு பிள்ளைகளை ஏற்றிச்செல்லும் இரண்டு மினிபஸ்களிலும் இரண்டு நேர, ஒரு நேரப் பாடசாலைகளுக்கும் வெற்றிடம் உண்டு உடன் தொடர்பு கொள்ளவும்;

றட்ணம்ஸ்
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி. 1079

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1984

### துரித மீட்டல் வகுப்புகள்

84ம் ஆண்டு பரீட்சைக்கான துரிதமீட்டல் வகுப்புகள் 14-3-84ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

அதிபர்
தொலைபேசி எண்: 22617.
876, பிரதான வீதி,
சுண்டுக்குளி.
யாழ்ப்பாணம். 1085

## பயிற்சி

அரச அங்கீகாரத்துடன் சர்வதேசப் புகழ்வாய்ந்த சான்றிதழுக்குரிய ஒரு மாத கால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. J. E. C 83, பருத்தித்துறைவீதி, (யாழ் புகையிரதக் கடவைக்கருகில்) யாழ்ப்பாணம். 1070

## வாடகைக்கு

விடியோ டெக் புதிய திரைப்பட விடியோ கசற் என்பன வாடகைக்கு கொடுக்கப்படும் Stanly Centre சுவாரத்தினம் கட்டிடம் (றெயில்வே கடவை அருகாமை) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 988

## WANTED

Jaffna Leading Firm requires Middle aged Field Representatives to market popular Office Equipments, Electrical Appliances and Tools, Agricultural Machineries, Motor Cycles, Generators and alike products in Northern Province. Excellent prospects for persons with right apptitude. Security essential. Previcus Experience preferred. Apply in own handwriting to 484, Hospital Road, Jaffna. 1082

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

பூநகரியைச் சேர்ந்த சித்தன் குறிச்சியிலிருந்து காலஞ் சென்ற ஆறுமுகம் முத்தையாவின் மரண சாதனமில்லாத மரணச் சொத்து விடயமாக.

காலஞ்சென்றவர்

1. கார்த்திகேசு இராசையாவும்
2. பெண் அன்னமும் இருவரும் சித்தன் குறிச்சி, பூநகரி.

மனுதாரர்கள்

மரணச்சொத்து நியாயாதிக்கம் இல. 214

எதிராக

முத்தையா கைம்பெண் சின்னப்பிள்ளை சித்தன் குறிச்சி, பூநகரி

எதிர்மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட மேற்கூறிய மனு 1984ம் ஆண்டு தை மாதம் 26ந் திகதி மாவட்ட நீதிபதி உயர்திரு எம். ஏச். காரியப்பர் முன்னிலையில் எடுபட்ட மேற்கூறிய மனுதாரர்கள் மரணமெய்தியவரின் சொத்தைப்பரிபாலனஞ் செய்யவும் நிருவகிக்கவும் தகுதி உடையவரென இந்நீதிமன்றம் காண்பதால்:

மேற்கூறிய மனுதாரர்கள் மரணமெய்தினவரின் சொத்துக்களை நிருவகிப்பதற்கு மேற்கூறிய எதிர்மனுதாரர் அல்லது அச்சொத்தில் அக்கறையுள்ளவரெவரும் 1984ம் ஆண்டு பங்குனி மாதம் 6ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் வெளிப்பட்டு இந்தப் பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாகப் படாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு மாசி மாதம் 23ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஆ. குணநாயகம்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
செ. பாலகிருஷ்ணன்,
மனுதாரர்களின் சட்டத்தரணி 1061

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுத்தது)

### வெற்றுச்சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் மூவாயிரம் (3000) வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு.

முடிவுதிகதி 05-03-84

பதில்
பொது முகாமையாளர்
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
28-2-'84 1080

## கேள்விப்பத்திர அறிவித்தல்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள மலசலகூடங்கள், கான்கள், சாப்பாட்டு அறைகள், அதன் சுற்றுடன் ஆகியவற்றைத் துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 1984-03-12ந் திகதி பி.ப. 4-00மணிவரை தொழிற்சாலை விநியோக உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்வதோடு இதர விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோக உத்தியோகத்தர்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன் துறை.
1984-02-27. 1069

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம் நயினாதீவு

### கேள்வி அறிவித்தல்

மேற்படி தேவஸ்தானத்தில் பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் (Tenders) தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடம் இருந்து கோரப்படுகின்றது. இவற்றுக்கான விபரங்களை சபைத் தலைவர் சட்டத்தரணி தியாகர் திருநாவுக்கரசு அவர்களுடம் இருந்து 10-3-84 பிற்பகல் 2-00 மணியளவில் தேவஸ்தான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தத்தின் முற்பணமாக முதலாவது வேலைக்கு 2500/-வும், இரண்டாவது வேலைக்கு 500/-வும், மூன்றாவது வேலைக்கு 1500/-வும் செலுத்திக் காரியாலயத்தில் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

#### வேலைகள் பற்றிய விபரம்

1. பிள்ளையார் பாதுகாப்புத் தேர்க்கட்டிடம்.
2. கல்யாண மண்டபத்திற்குக் குளியும், இரண்டு மலகூடங்களும்.
3. பிள்ளையார் தேர்க்கட்டிடம், முருகன் தேர்க்கட்டிடம், மஞ்சம் கட்டிடத்திற்கான அலுமேனிய பாதுகாப்புக் கதவுகள்.

[தி. க. மகாலிங்கசிவம் J.P.]
செயலாளர்,
அறங்காவலர்சபை.
26-2-84. 1076

## யாழ். கல்வித்திணைக்கள சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான கேள்விப்பத்திரம் கோரல் 1984

மேற்படி சிற்றுண்டிச்சாலையை 01-04-1984 திகதியில் இருந்து எடுத்து நடாத்துவதற்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

விண்ணப்ப முடிவு திகதி 15-03-1984

விபரங்கட்குத் தொடர்புகொள்ளவும்;

பொதுச்செயலாளர்
யாழ். கல்வித்திணைக்கள நலன்புரி கழகம்,
(1068) கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.

## மீண்டும் நடைபெறுகிறது

தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கு

**பாரத் சென்ரர்**

178, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
போன்: 24265
(1084)

## FINANCIAL ASSOCIATION

402, 1/2 K. K. S ROAD, JAFFNA.
[சிவன்கோவிலடி]

வட இலங்கை சங்கீதசபை பரீட்சைக்குரிய
இசை வகுப்புகள்

★ சங்கீதம் (வாய்ப்பாட்டு) ★ வயலின்
★ வீணை ★ மிருதங்கம்

ஆரம்பம்: 5-3-84

விபரங்கட்கு:

(F) பை நான்சியல் அசோசியேசன்
இசைப்பிரிவு
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் (1034)

## VACANCIES

கீழ்க்காணும் துறைகளில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

1. Welders ஓட்டுனர்
2. Fitters பொருத்துனர்
3. Tinkers உலோக வேலையாளர்

PROMOTERS ENGINEERING COMPANY LTD.
844, POINT PEDRO ROAD, NALLUR, JAFFNA, SRI LANKA. (1074)

## பேராதனை, கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின்

(வெளிநிலை) விரிவுகைள் 1984/85

புதிய மாணவர்களை அனுமதித்தல்

இலங்கைப் பல்கலைக்கழகப் பாடநெறிகளான கலை, விஞ்ஞானம், சட்டம், வர்த்தகம் ஆகிய பாடநெறிகளுக்கான விரிவுரைகளுக்கு க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்திரட்டினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 5/- செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 14-03-1984

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப்படிவம் 14-03-84 வரை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உதவிப் பதிவாளர்,

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## உடன் விற்பனைக்கு

நன்கு திருத்தப்பட்ட நீர்ப்பாசன வசதியுடைய இரண்டு நெல்வயல்கள்

கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் பரந்தன் ஐந்தாம் வாய்க்காலில் புகையிரதப்பாதைக்கு அண்மையில் 20 ஏக்கரும் 15 ஏக்கரும் விஸ்தீரணமுள்ள இரண்டு நெல் வயல்கள் உடன் விற்பனைக்குள்ளன.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

விளம்பரதாரர்

இல: 7, ஹேவா அவெனியூ, கொழும்பு - 7.

1016 தொலைபேசி: 92828 — கொழும்பு

# ஈரான் - ஈராக் போரை நிறுத்த குவைத் அவசர கோரிக்கை!

## தொடர்ந்து பலத்த சண்டை; இருதரப்பிலும் தினமும் ஆயிரக்கணக்கில் பலி!

குவைத், பெப். 29

**கடந்த ஒரு வாரமாக உக்கிரமடைந்துள்ள ஈரான்–ஈராக் போரை நிறுத்துவதற்கு அணிசேரா இயக்கமும், இஸ்லாமியப் பேரவையும் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குவைத் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இருதரப்பினரும் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டிருப்பதால் தினமும் ஆயிரக்கணக்கான வீரர்கள் இருதரப்பிலும் பலியாகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிய வீரர்கள் தொடர்ந்து பலத்த தாக்குதலை நடத்தி வருகின்றன ஈரானின் துறைமுக நகரமான பஸ்ராவின் கிழக்குப்பகுதியில் பலத்த தாக்குதலை நடத்திய ஈராக் வீரர்கள் அப்பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

ஈராக்கிய விமானங்களும், ஹெலிகப்டர்களும் தொடர்ந்து ஈரானிய நிலைகளைத் தாக்கி வருகின்ற அதே வேளையில் ஈரானியபடைகள் ஈராக்கிய வீரர்களுக்கு எதிராக நடத்திய தாக்குதலில் பல விமானங்களும், ஹெலிகப்டரும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈரான் அறிவித்துள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் இடம்பெற்ற பலத்த சண்டையில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான ஈராக் வீரர்களை கொன்றுவிட்டதாக ஈரானும் அறிவித்துள்ள ஈரானிய துருப்புகளை கொன்றுவிட்டதாக ஈராக்கும், 8,500 என. (கு)

## பஞ்சாப் கலவரங்களை அடக்க கடும் நடவடிக்கை

### இந்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் கலவரங்களை அடக்குவதற்கு இந்திய அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக அறிவித்துள்ளது.

பஞ்சாப் பிரச்னை குறித்து பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திலேயே அரசின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பஞ்சாப் கலவரங்களில் இதுவரை 70 பேர் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும், 300க்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. பஞ்சாப் பிரச்னை குறித்து ஜனதாகட்சி கொண்டுவந்த அவசர பிரேரணை நேற்று பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டு விட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தை அகாலிதள் நிராகரித்திருப்பது நாட்டுமக்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளதாக உள்துறைஸ்ரேட் மந்திரி திரு. வெங்கட சுப்பையா விவாதத்தில் பேசியபோது தெரிவித்தார். (கு

## இந்திய ராஜதந்திரி கொலை: காஷ்மீர் இளைஞர் மீது கொலைக் குற்றச்சாட்டு!

(லண்டன்)

பர்மிங்காமில் இந்திய ராஜதந்திரியைக் கொலைசெய்ததாக காஷ்மீர் இளைஞர் ஒருவர்மீது குற்றஞ்சுமத்தி பொலிசார் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

ராஜதந்திரியின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவருக்கு எதிராக ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ராஜதந்திரியைக் கடத்தியதாகவே அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டது.

நேற்று மற்றுமொரு இளைஞர் மீது பொலிசார் கொலைக் குற்றச்சாட்டைத் தாக்கல் செய்தனர். (கு)

## இந்திய விதை வெங்காயம் ப. நோ. கூ. சங்க மூலம் விநியோகம்

(மாவிட்டபுரம்)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விதை வெங்காயம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக யாழ். மாவட்டத்தில் வெங்காயச் செய்கை முற்றாக நாசமாகியதுடன் விவசாயிகள் மீண்டும் வெங்காயச் செய்கையை மேற்கொள்ள விதை வெங்காயமும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சமாசம் இந்தியாவிலிருந்து விதைவெங்காயத்தை இறக்குமதி செய்து ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

விதை வெங்காயம் தேவைப்படும் விவசாயிகள் தத்தமது பகுதி ப. நோ. கூ. சங்கங்களிடம் தமது தேவையை பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக சமாசத் தலைவர் திரு. சி. சிவமகாராசன் யாழ் 20அரசாங்க அதிபர் ஊடாக விவசாயத்திணைக்களத்தோடு இணைந்து நடவடிக்கையை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பாக். பொதுத் தேர்தல் 3மாதத்திற்குமுன் அறிவிப்பு!

லாகூர், பெப். 29

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்ற போதிலும் அதற்கான திகதி மூன்றுமாதங்களின் முன்னரே அறிவிக்கப்படுமென்று பாகிஸ்தான் அதிபர் ஸியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக சிறை வைக்கப்பட்டிருந்த அரசியல் தலைவர்கள் பலர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

தற்போது தனிப்பட்ட சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டு லாகூர் வந்திருக்கும் அதிபர் ஹக், தேர்தல் நடைபெறுவதற்கு முதல் மூன்று மாதங்களின் முன்னரே திகதி பற்றி அறிவிக்கப்படுமென்றும் இரண்டரை மாதங்கள் தேர்தல் பிரசாரத்திற்கு அரசியல் கட்சிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமென்றும் கூறியுள்ளார்.

அடுத்தமாதம் 23ம் திகதி பாகிஸ்தான் தேசிய தினத்தன்று தேர்தல் பற்றி அறிவிக்கப்படமாட்டாதென்றும் அவர் கூறினார். (கு)

## தமிழர் பண்பாட்டை 'சினிமா, ரி.வி. பாதிக்கிறது'' விரிவுரையாளர் கருத்து

(யாழ்ப்பாணம்)

''தமிழர் கலாசாரத்தை வடமொழிக் கலாசாரம், ஐரோப்பிய கலாசாரம், முதலாளித்துவ கலாசாரம் போன்றவை தாக்கியபோதும் தனித்துவத்தை தமிழர் பண்பாடு இழக்கவில்லை. இன்று சினிமா, ரி. வி. கலாசாரம் தமிழர் பண்பாட்டை தாக்கிவருகிறது ஆனால் இப்பண்பாடு இத்தாக்கத்தையும் எதிர்த்து நிற்கும் என்ற நம்பிக்கை நன்கு இருக்கிறது. காரணம் தமிழர் எப்போதும் ஒழுக்கம், தெய்வ நம்பிக்கை, இரக்கம் என்பவற்றைக் கொண்டவர்கள்''

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. மௌனகுரு, 'சமுதாய ஒழுக்கவியல்' என்ற தலைப்பிலான வகுப்பொன்றில் உரையாற்றுகையில் கூறினார். இவ்வகுப்பு யாழ்ப்பாணம் சந்நிதி மடத்திலுள்ள கல்வி நிறுவனம் ஒன்றில் இடம்பெற்றது

ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் இவ்வகுப்புக்குத் தலைமைதாங்கினார். உயர் வகுப்பு மாணவர்கள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

''இவ்வகுப்பு பாடவிதானத்துக்கு அப்பாற்பட்டதல்ல ஒரு சிறந்த குடிமகனாக ஒவ்வொரு மாணவனும் உருவாக வேண்டும். படிக்கும் பாடங்கள் எதுவானாலும் அது சமுதாயப்பரிமாணத்தோடு பயன்பெற சமுதாய ஒழுக்கவியல் வழிகாட்டும்'' என்று திரு. க. சிவராமலிங்கம் குறிப்பிட்டார். (கி)

## முகாமுக்கு மின்சாரம்

(துணுக்காய்)

யோகபுரம் அகதிகள் முகாமுக்கு தற்காலிகமாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பலனாக தற்போது முகாமில் உள்ள சகல வேலைகளையும் வசதியாக செய்யக்கூடியதாக உள்ளது.

## கைதான இளைஞர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மாங்குளத்தில் தாக்குதலுக்குள்ளானபோது கைது செய்யப்பட்ட இளைஞர் மறுநாள் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக, தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ் மாவட்ட அலுவலர் திரு எஸ் சிவானந்தமூர்த்தி தெரிவித்தார்.

தலைமை அலுவலகத்துடன் தாம் தொடர்பு கொண்டதை அடுத்து இந்த இளைஞர் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (வண-திரு)


## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ் நகரிலேயே பதிவு செய்துகொள்ள

நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

**குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்.**

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, அமெரிக்கா

செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும் பயணச்சீட்டுக்களை

மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE) LTD,
STAGE II, MODEL MARKET,
No 5 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone: 22065, 22040

## மணிவாக்கு

முதல் ஐந்து வயதில் கற்றுக்கொள்ளாத குழந்தை பிற்காலத்தில் கற்றுக்கொள்வதே இல்லை. தாயின் கருவிலிருக்கும் போதே குழந்தையின் படிப்பு ஆரம்பமாகிவிடுகிறது.

—மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## வட்டமேசையும் வடபகுதியும்

தேசிய நலனைக் கருதி, தமிழ் மக்களின் தொல்லைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசியல் அணுகுமுறையே சிறந்ததென்பது எமது தெளிவான திருத்தமான அபிப்பிராயம்.

நீண்டகால 'நெருக்கடிகள்' இந்த முடிவை ஏற்படுத்தியதையிட்டு நாம் மட்டுமல்ல நாட்டிலுள்ள சகல கட்சிகளும், சமுதாய, சமய நிறுவனங்களும் மகிழ்ச்சி தெரிவித்தன.

சர்வகட்சியென்று ஆரம்பித்து அது வட்டமேசையாக மாறியபோது ஒரு சந்தேகம் கிளம்பியபோதும், நாடளாவிய அடிப்படையில் பொதுஜன அபிப்பிராயம் திரள அது வழிகோலுமென்ற கருத்து வலுப்பெற்றது.

இம்மாநாட்டுக்கு இருந்த முட்டுக்கட்டையை நீக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி அளித்த மிக நியாயமான ஆலோசனை, தமிழ் மக்கள் பிரதிநிதிகளை அழைக்க பெரிதும் உதவியது குறிப்பிடத்தக்கது.

வெண்ணெய்திரளும்போது தாழி உடைந்தது போல ஸ்ரீலங்கா இம்மாநாட்டில் பங்குபற்ற விரும்பாதிருந்ததும், பங்கு பற்றிப் பின் வெளியேறியதும் பெரும் வேதனைக்குரியது.

அடுத்த தேர்தலைக் காத்திருக்கும் அரசியல் லாபம் தேசநலனை மறப்பதில் அதிசயமில்லை; ஆனால் ஸ்ரீலங்கா -குறிப்பாக அதன் தலைவியும், அவருடைய அருமை மகன் எதிர்க்கட்சித்தலைவர் அனுரவும் கொடுத்த விளக்கம், பொதுமக்களைத் திசைதிருப்ப முடிந்தாலும் நியாயமற்றதென்பதில் எதுவித ஐயமுமில்லை.

இந்தக்கோணல்வழி மிக வசீகரமாகத் தோன்றிய போதும் நிச்சயம் நன்மை பயக்காது.

வடபகுதியில் அதிகரிக்கும் வன்செயல்களைப் பணயம்வைத்து சிங்கள மக்களின் ஆதரவுக்குப் போட்டியிடுவது, குளிக்கப் போய் சேறுபூசுவது போலிருக்கிறது; எவ்வளவு விரைவில் இம்மாநாடு வெற்றியடைகிறதோ அவ்வளவு விரைவில் நாட்டின் பல குழப்பங்களும் முடிவடையும்.

அடுத்த தேர்தலை நம்பி, அல்லது ஆட்சியில் ஒரு மாற்றத்தை கருத்திற்கொண்டு தாம் முன்னர் கூறிய ஆலோசனைகளை ஸ்ரீலங்கா காற்றில் விடுவது ஆளுங்கட்சிக்கு ஏமாற்றம் மட்டுமல்ல, ஒரு அச்சத்தையும் உண்டுபண்ணியிருப்பதுபோலிருக்கிறது; எனவே அதன் காற்றும் மாறி வீசத் தொடங்கிவிட்டது; இன்று பெய்யும் பெய்மழை போல அரசியலும் பருவம்கெட்டு நிற்கிறது.

பாராளுமன்றத் தொடக்கக் கூட்டத்தில் 'தமிழர் பிரச்னையைத் தீர்த்து வைக்க எல்லாக் கட்சிகளினதும் தலைவர்களினதும் ஒத்துழைப்பை மிகக் கண்டிப்பாக கோரியிருந்தார் ஜனாதிபதி. நாட்டுக்கு ஒரு புதிய திருப்பம் ஏற்படலாமென்று நாமும் எண்ணினோம்.

இன்று பார்த்தால் பொலநறுவை தேசிய இளைஞர் முகாமில் வடபகுதி பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் திட்டத்தையே மீண்டும் வற்புறுத்தியிருப்பது ஆச்சரியமல்ல; ஆனால் இது சடுதி மன மாற்றத்தைக் குறிக்கிறது. யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைமை காரணமாயிருக்கலாம்.

26 வருடத்துக்கு முன் நடந்த நாடகம் இன்று மீண்டும் நடிக்கப்படுவதாகத் தெரிகிறது.

செல்வா—பண்டா ஒப்பந்தம் அன்று நியாயமான தீர்வு என்ற போது அது கிழிபட்டது; இன்று எத்தனை ஆண்டு அனுபவம், எத்தனை துன்பங்கள், நட்டங்கள், எத்தனை தேசிய வீழ்ச்சி—இவற்றிற்குப் பின்னும் பழையகுருடி என்ற போக்கில் ஒரு நல்ல தீர்வு தடைப்படுகிறது. அன்றைய பழி இன்னும் தொடர்கிறதே!

வடபகுதி பயங்கரவாதம் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும்; இராணுவத்தினும், பொலிஸாரால், அமெரிக்க ஸ்டைல் தொண்டர் படையால், இராணுவ ஆட்சியால் மக்களை அடக்கலாம், பயங்கரவாதிகளைத் தானும் ஒழிக்கலாம்; சிங்கப்பூர் பொருளாதாரம் போல் இதுவும் நாட்டுக்கு உகந்ததல்ல.

இந்நாட்டுமக்கள் என்ற வகையில் தமிழ் மக்கள் நாட்டில் எங்கு வசித்தாலும் நிம்மதியாகவும் சட்டத்தின் பாதுகாப்பிலும் வாழ அது வழி கோலாது.

இன்றைய பெரு வெள்ளமும் 'பயங்கரவாதமும்' இருதரப்பட்ட அழிக்கும் சக்திகள். மக்களைப் பாதுகாத்து, அவற்றை வடியப் பண்ணுவதிலேயே வெற்றி தங்கியுள்ளது.

# குறுகிய காலத்தில் நீண்ட பயணம்

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியத்துக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி கௌரவப்பட்டமளித்து கௌரவித்தது.

தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைகழகத்தின் செய்திக்கோவை ஒன்று பெரியார் ச. அம்பிகைபாகன் மூலமாக கிடைத்தது.

இத்தனை சிறப்புக்களையும் பெருமைகளையும் கொண்ட பல்கலைக்கழகம் ஒன்றின் துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம் தனக்களித்த இந்த பட்டத்தை பெருமையுடன் பெற்றுச் சென்றதை நினைக்கின்றபோது எமது பல்கலைக்கழகம் சற்று நிமிர்ந்து நிற்பதாகவே எனக்குப்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பணிகள் பற்றிய குறிப்பை இங்கே தருகிறோம்.

இருபது தொகுதிகளைக் கொண்ட விஞ்ஞான கலைக்களஞ்சியத்தையும் பதின்மூன்று தொகுதிகளை கொண்ட மனிதப்பண்பியல் கலைக்களஞ்சியங்களையும் பதின்மூன்று தொகுதிகளைக்கொண்ட தமிழ் அகராதியையும் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம் தயாரித்துவருகிறது.

அரவு நிலையம், தொலைக்காட்சி நிலையம், நூதனசாலை, நூல்நிலையம் என்பன பல்கலைக்கழகத்தில் செயற்பட்டு வருகின்றன. காஞ்சிபுரத்திலுள்ள தத்துவக்கலை களூரியும் உதகமண்டலத்திலுள்ள ஆதிக்குடிகள் பற்றிய ஆய்வுநிலையமும் சேர்ந்து ராமேஸ்வரத்தில் நீருக்கு அடியில் புதைபொருள் ஆய்வுநிலையம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

பலமொழிகளிலுள்ள விஞ்ஞான சட்ட நூல்களை தமிழில் மொழி பெயர்ப்பதில் கூடிய முயற்சி எடுத்து தமிழில் பதிப்பித்து எல்லாப் பாடங்களையும் தமிழ்மொழி மூலம் கற்பிக்க தமிழ்ப்பல்கலைக்கழகம் வழிவகுத்தது.

பல்கலைக்கழகம் சுதேச ஆய்விலிருந்து வேறுபட்ட தரங்களிலும் மொழிபெயர்ப்புகளை மேற்கொண்டு உபயோகமான முக்கியத்துவமானவற்றை பிறமொழிகளிலிருந்து கண்டு பிடித்துள்ளன.

பல வெளிநாட்டு மாணவர்கள் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் ஆய்வுகளைமேற்கொள்கின்றனர். வெளிநாட்டு மாணவர்கள் பலர் இங்கு ஆய்வில் ஈடுபட காத்துக்கொண்டிருக்கிறார்கள். பல்கலைக்கழகம் தனது மாணவர்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி உலக அரங்கிலே வெவ்வேறு தமிழ்க்கல்வி, தமிழ் இலக்கியம் என்பவற்றின் நிலையை கற்பதற்காக அனுப்பி வைக்கிறது.

— எஸ். செஸ்கே.

## குழமுனை வீதிகள்

முல்லைத்தீவில் இருந்து தண்ணீரூற்று ஊடாகவும் அழம்பில் ஊடாகவும் குழமுனைக்குச்செல்லும் வீதிகள் தொடர்ந்து பெய்துவந்த பெருமழையினால் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளதால் குழமுனைக்கு போக்குவரத்து அறவே துண்டிக்கப்பட்டுள்ளது. குழமுனைக்குச் செல்லும் வீதிகள் நீண்டகாலமாகவே பழுது பார்க்கப்படாமையாலேயே அண்மையில் பெய்த பெருமழையினால் பலத்த சேதத்துக்குள்ளாயிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாளாந்தம் அங்குள்ள மக்கள் தமது அன்றாடதேவைகளை பூர்த்திசெய்வதற்காக குழமுனையிலிருந்து தண்ணீரூற்றுக்கு 6 மைல் தூரம் நடந்து சென்றே முல்லைத்தீவுக்கும் ஏனைய இடங்களுக்கும் பிரயாணத்தை மேற்கொள்கின்

## மக்கள் கருத்து

றனர். பாடசாலை மாணவ மாணவிகள் போக்குவரத்து தடைப்பட்டதால் தமது படிப்பைத் தொடரமுடியாது திண்டாடுகின்றனர்கள். ஆசிரியர்களும் மற்றும் உத்தியோகத்தர்களும் தமது கடமைகளுக்குச் செல்லமுடியாது பெருத்த சிரமத்துக்குள்ளாகின்றனர்கள். நோய் நொடியால் பீடிக்கப்பட்டவர்கள் பாடு சொல்லுந்தரமன்று.

அழம்பிலில் இருந்து குழமுனையைச் சென்றடையும் இரண்டரை மைல் நீளமான வீதி ஏனைய வீதிகளோடு ஒப்பிடும்போது சிறு திருத்தவேலை செய்யப்படின் போக்குவரத்துச் சேவையை நடாத்தமுடியும். பெருத்த மழைக்குப் பின்பு குழமுனைக்கு இதுவரை போக்குவரத்து நடைபெறவில்லை. வீதியின் சீர்கேடே காரணம் என வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் இந்நிலையை நீடிக்கவிடாது அப்பகுதி மக்களின் நலன்கருதி முல்லைத்தீவு நெடுஞ்சாலைகள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அவர்கள் இவ்விடயத்தில்கூடிய கவனம் எடுத்து துரிதகதியில் வீதிகள் சீரமைக்கப்பட நடவடிக்கை யெடுத்து போக்குவரத்து நடைபெற ஆவனசெய்ய வேண்டும்.

சி அம்பிகைபாகன்.
குழமுனை.
முள்ளியவளை.

## வீதிகள் சீர்கேடு; கவனிப்பார் இல்லையா?

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள அம்மன்கோவில் பின்வீதி மிகவும் கேவலமாகவுள்ளது. இப்பகுதி மிகமிகத் தாழ்வாக உள்ளதால் சிறிதுமழை பெய்தவுடனேயே பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்கின்றது. றோட்டால் பிரயாணம் செய்பவர்களுக்குமட்டுமன்றி பக்கத்தில் வீடுகளில் உள்ளவர்களுக்கும் இவ்வெள்ளம் பெரும் உபத்திரவமாகவுள்ளது. தொற்று நோய்விடயத்தில் பெரும் அச்சத்தை உண்டு பண்ணுவதாயுள்ள இவ்வீதி விடயத்தில் கோண்டாவில் சமூக பொதுநல நிறுவனங்கள் அக்கறை எடுத்தால், யாழ். அபிவிருத்தி சபை முதலியன அக்கறை காட்டினால் இவ்வீதி திருத்தப்படும் என்பது உறுதி இவ்விடயத்தில் உரியவர்கள் கவனமெடுக்கச்செய்வார்களா?

ச. கனகலிங்கம்
கொக்குவில் மேற்கு.

## காசநோய்த்தடுப்பு மருந்து கொடுக்க புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லையினுள் சுமார் 6000 பிள்ளைகளுக்கு காசநோய் தடுப்புமருந்தான பீ சீ ஜீ கொடுக்கப்பட வேண்டுமென கணிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இலங்கைத் தேசிய காசரோகத் தடுப்புசபையின் யாழ்கிளை நிர்வாக சபைக்கூட்டத்தில் இந்த விபரங்கள் தெரியவந்தது இக்கூட்டத்தில் பின்வரும் விபரங்கள் முக்கியமாக விவாதிக்கப்பட்டன.

யாழ். மாநகரசபை எல்லைப் பகுதியினுள் கடந்த சில வருடங்களாக பீ சீ ஜீ. கொடுபடவில்லை பாடசாலை வைத்திய அதிகாரி காரியாலயத்தில் போதியளவு அதிகாரிகள் நியமிக்கப்படாமையால் தான் இது ஏற்பட்டதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்படி சங்கம் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறிப்பாக சுகாதார சேவைகள் அத்தியட்சகரின் உதவியுடன் ஒரு விசேட திட்டத்தை ஆரம்பித்து அதன்படி வேறு இடங்களிலிருந்து சுகாதாரப்பரிசோதகர்களை வரவழைத்து பாடசாலை வைத்திய அதிகாரிகள் தலைமையில் இரண்டு வாரங்களுக்கு சகல பாடசாலைகளுக்கும் விஜயம் செய்து இந்த தடுப்பு ஊசியை ஏற்றவுள்ளனர். இத்திட்டத்துக்கான மேலதிக செலவுகளை சங்க யாழ்கிளையே பொறுப்பேற்கும். சுகாதார பரிசோதகர்களுக்கு உதவியாக தொண்டர்களை அனுப்பிவைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வருங்காலத்தில் இத்தகைய தேக்க நிலை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கும்படியும் சுகாதாரசேவைகள் அத்தியட்சகரை கேட்டுக்கொள்வதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (சு)

## "தான் சந்திக்கும் முரண்பாடுகளையே இலக்கியமாக்குகிறார்"

### நூல் வெளியீட்டு விழாவில் எழுத்தாளருக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"சமுதாயத்தில் எத்தனையோ நிகழ்வுகள் நடைபெறுகின்றன. நாம் அவைபற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் ஒரு கலைஞன் இந்த நிகழ்வுகளினால் தாக்கப்படுகிறான். மிக நுண்மையான தூண்டற் பேறுகளாக அவன் இவற்றை வெளிப்படுத்துகிறான். சமுதாய முரண்பாடுகளைப் பற்றிச் சிந்திக்கிறபோது இந்தக் கலைஞன் ஒரு சித்தனுவாதியாகிறான். கோகிலாவும் இந்த முரண்பாடுகளைப் பற்றி ஆழமாகச் சிந்தித்திருக்கிறார். எமது சிந்தனையையும் தட்டிவிடக் கூடிய பல நல்ல விடயங்கள் இந்த நூலில் இருக்கின்றன. இது ஒரு நல்ல அம்சம்"

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெற்ற கோகிலா மகேந்திரனின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சித்திரலேகா மௌனகுரு மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

"எமது சமுதாயம் எந்தப் படைப்பிலும் பெண்ணுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. இறைவனைப் பற்றிப் பேசினாலும் அதில் பெண்ணைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனாலும் இந்தப் பெண் பாத்திரங்களை ஆண்களே படைக்கிறார்கள். பெண் படைப்பாளர்களின் விகிதாசாரம் பொதுவாகக் குறைவாகவே இருக்கிறது. பெண்களுடைய எண்ணங்களையும் ஆண்களே வெளியிடவேண்டியநிலை இருக்கிறது. ஆனால் பெண்ணாக இருப்பதால் மட்டுமே சந்திக்கக்கூடிய விடயங்களை ஆண்கள் தவறவிட்டுவிடு

(5-ம் பக்கம் பார்க்க)

# மட்டு. ஆஸ்பத்திரி டாக்டர் 3 மணி நேரவேலை நிறுத்தம்!

(இரா உதயகுமார்)

மட்டக்களப்பு அரசாங்க ஆஸ்பத்திரி டாக்டர்களின் வேலைநிறுத்தம் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. அந்தோனிமுத்துவின் தலையீட்டினால் கைவிடப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி அதிகாரி ஒருவர் தமது கடமையைச் செய்யவிடாது குழப்பியதாகவும், இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் கோரி டாக்டர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் எடுத்த நடவடிக்கையை அடுத்துக் குறிப்பிட்ட கிராமிய அபிவிருத்தி அதிகாரி டாக்டரிடம் மன்னிப்புக் கோரினார். இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மூன்று மணிநேரத்தின் பின் இந்த வேலை நிறுத்தத்தை கைவிட்டனர்.

## இராமகிருஷ்ண ஜயந்தி விழா

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 149வது ஜயந்தி விழா 4 நாட்கள் நடைபெறவுள்ளன.

சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் இம்மாதம் 4ம், 9ம், 10ம், 11ம் திகதிகளில் இந்த ஜயந்திவிழா நடைபெறவுள்ளது. (வெ)

## இன்றைய பலன்

சோபகிருது மாசி 18-ம் திகதி (1—3—84) வியாழக்கிழமை

மேடம்: நினைத்தது நடக்காது நிதியில் முடக்கமுண்டு பூமிப்பிணக்கும் தலைகாட்டக் கூடும் அதிக சிந்தனை தலைபிடியைக் கொடுக்கும் உடல் நலத்தைப் பேணிக் கொள்ளவும்.

இடபம்: வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவங்கள் இடம் பெறும் வாகன விருத்திக்கு இடமுண்டு நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பான தினம் கல்வியிலும் ஆர்வம் பிறக்கும்.

மிதுனம்: நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்றுபொன்னான நாள் தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதல்கள் கிடைக்கும்.

கடகம்: எக்காரியத்திலும் அதிக கவனஞ் செலுத்துவது விரும்பத்தக்கது உதவி செய்யப்போய் குறை கேட்க நேரிடலாம் உடல்நலத்தைப் பேணவும்.

சிங்கம்: இன்று எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும் களஸ்திர வழியாக பொருள் வரவும் உண்டு பெரியோர் மதிப்பும் உண்டாகும்.

கன்னி: பல வழிகளிலும் பணம் பாழாகும் வேண்டாத விருந்தினர்களின் வருகை உங்களுக்கு வேதனையைத் தரலாம் நண்பர் ஒருவரின் உடல்நலம் பாதிக்கப்படலாம் எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

துலாம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் தெய்வத்தின் அருளும் வேண்டும்.

விருச்சிகம்: புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள் உடல் நலத்திலும் இனிமைக்குஇடமுண்டு மகிழ்ச்சிகரமான தினம்.

தனுசு: வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும் விருந்தினர்கள் உங்களை நாடி வருவார்கள் தொழில் இடமாற்றமும் ஏற்படலாம்.

மகரம்: துன்பத்தின் சாயல் மனதிலே படியும் பிறர் புண்சொல்லால் மனது புண்படும் சிலர் உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்வார்கள்.

கும்பம்: நினைவின் நிழலாட்டம் நிம்மதியைச் சிதறடிக்கும் உறவினர்கள் மத்தியில் பூசல்கள் தலைதூக்கும் அன்னியர்கள் தொடர்பால் சிக்கல்கள் தோன்றலாம்.

மீனம்: கன்னல் மொழிபேசி காரியத்தை சாதிப்பீர்கள் கவர்ச்சிகரமான சம்பவங்களும் இடம்பெறும் குடும்பத்திலும் அமைதி நிலவும் வெளியூர் நண்பர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
வேலுப்பிள்ளை ரவீந்திரன்

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் கடந்த ஆண்டு தொழிற் திணைக்களத்தின் ஆதரவில் நடைபெற்ற தையல் பயிற்சிநெறியில் பங்கு பற்றி பயிற்சியை பூர்த்தி செய்த மாணவிகளுக்கு அதற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. யாழ். தொழிற் திணைக்கள உதவி ஆணையாளர் திரு என். தியாகராசா இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார்.

## சைக்கிள் திருட்டு குற்றத்தை ஏற்ருர்

(மாவிட்டபுரம்)

சைக்கிள் திருட்டுச் சம்பந்தமாக கைதான சந்தேகநபர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதால் தண்டனைவழங்குவது ஒத்திப்போடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் மண்டைதீவு காட்டுப்புலம் 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா பரமகுரு என்னும் 19 வாலிபரைக் கைது செய்ததுடன் திருட்டுச் சைக்கிளையும் மீட்டனர்.

இவ்வாலிபர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவரது கையடையாளத்தை பதிவு செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதி தண்டனை வழங்குவதை மார்ச் 19ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | ஜெர்மன் விளையாட்டுக்கள் (இறுதி நிகழ்ச்சி) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7- 5 | கலை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 7-45 | இசைநிகழ்ச்சி (சிங்களம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | குறுந்திரைப்படம் (சிங்களம்) |
| 9-05 | 'பொவனுபுர-84' — தே. இ. சே. ம. நிகழ்ச்சி |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | 'லக்னர்' தொலைக்காட்சி தொடர் சித்திரம் (ஆங்கிலம்) |
| 10-30 | உலகச் செய்திச் சுருக்கங்கள் |
| 10-35 | வர்ணர் தொடர்ச்சி |
| 10 55 | நிகழ்ச்சிகள் முடிவு. |

வடக்கு - கிழக்கு இளைஞர்களுக்காக

# நிலாவெளியில் மீண்டும் ஒருமுகாம் நடத்தப்படும்

## பொலநறுவையில் அமைச்சர் ரணில் தகவல்

(இ. சந்தசாமி)

கடும்மழை பெய்துகொண்டிருக்கும் அதேவேளையில் இங்கு பெரும் எடுப்பாக நடைபெற்ற இளைஞர் முகாமில் கலந்துகொண்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களும் தம்சொந்த இடங்கள் நோக்கிப் புறப்பட்டனர்.

ஒருசிலதினங்களே முகாம் நடைபெற்றது என்ருலும் அங்கு அந்யோன்யமாகக்கலந்து பழகிய இளைஞர்களும் யுவதிகளும் பிரிவுத்துயரைத் தாங்கமுடியாமல் சிவந்த கண்களுடன் புறப்பட்டனர்.

இறுதித்தினத்தில்பத்திரிகையாளர்களுக்கென மகாநாடொன்றை நடத்திய இளைஞர் சேவைகள் துறை அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க பத்திரிகைகள் அளித்த பிரசாரத்திற்காக நன்றிதெரிவித்தார்.

1971ம் ஆண்டு இளைஞர் கிளர்ச்சியை அடுத்து 2400 பேர் பொலநறுவையில் கொண்டுவந்து அடைக்கப்பட்டனர். பின்னர் இந்த அரசு பதவிக்குவந்தபின் அவர்களில் பலரும் விடுதலையாகினர் ஆனல் இன்று தாமாகவே இங்குவந்து மகிழ்ச்சியுடன் ஒன்றுகலந்து பழகியபின் திரும்பிச்செல்கையில் மிகுந்த மன வருத்தத்துடன் புறப்படுகிருர்கள் என்ருர் அமைச்சர்.

முகாம் நல்லமுறையில் நடத்தப்பட்டபோதிலும் மழை காரணமாக சிறப்பாக நடத்தப்படமுடியவில்லை யென்று அமைச்சர் சொன்னர்.

பதட்டம் காரணமாகவும் கொள்ளைச்சம்பவங்கள் காரணமாகவும் வடக்குக் கிழக்குப்பகுதிகளிலிருந்து இளைஞர்கள் முகாமில் கலந்து கொள்ளமுடியவில்லை அவர்களுக்குக்காக விரைவில் நிலாவெளியில் ஒரு முகாம் நடத்தப்படும் என்று அமைச்சர் கூறினுர்.

## "சர்வதேச ரீதியில் சேவை செய்யும் ரோட்டரிக் கழகம்"

(அரியாலை)

"பொழுது போக்குக்காக சிக்காகோ நகரில் வழக்கறிஞர் போல் ஹரீஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் இன்று சர்வதேச ரீதியில் சேவை செய்யும் ரோட்டறிக் கழகமாக மாறி செயலாற்றி வருகிறது."

இவ்வாறு யாழ். ரோட்டரிக் கழக முன்னுள் தலைவரும், சட்டத்தரணியுமான திரு. ஆர். பாலசுப்பிரமணியம் யாழ் பரி. யோவான் கல்லூரி பீற்றர் ஞாபகார்த்த மண்டபத்தில் சர்வதேச ரோட்டறியின் 79ம் ஆண்டு நிறைவு தினத்தையொட்டி யாழ். ரோட்டறிக்கழகம் நடாத்திய நிறைவு விழாவில் "1905ல் ரோட்டறி", என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். ரோட்டறிக்கழகத் தலைவர் திரு எஸ். சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிறைவுவிழாவில் திரு. பாலசுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் சர்வதேச ரீதியில் செயல்பட்டு வரும் ரோட்டரிக் கழகத்தின் பிரிவான யாழ்ப்பாண ரோட்டறிக்கழகத்தின் இணைப்புக்கழகமாக மாணவர்கள் மத்தியில் இன்ரக்கழகம் முதன் முதலாக யாழ். பரி. யோவான் கல்லூரியிலே நிறுவப்பட்டது. ரோட்டறிக்கழகத்தில் பெண்களுக்கு அங்கத்துவம் வழங்கப்படுவதில்லை. ஆனல் இன்ரக் கழகத்தில் பெண்களுக்கு அங்கத்துவம் உண்டு. யாழ்ப்பாணத்திலிருக்கும் இருபெண்கள் கல்லூரியில் பெண்களுக்கான இன்ரக்கழகங்கள் நிறுவப்படவிருக்கின்றன. இது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இன்ரக் கழகங்களினுல் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்கும், கிராமப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கும் ரோட்டறிக்கழகம் வேண்டிய ஆதரவை வழங்கும் என்றும் குறிப்பிட்டார்.

"வள்ளுவன் கண்ட பெண்ணு? பாரதி கண்ட பெண்ணு? சிறந்தவள் என்ற தலைப்பில் யாழ். பரி. யோவான் கல்லூரி மாணவர்களும், யாழ். சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்ட விவாதப் போட்டியில் பாரதி கண்ட பெண் சிறந்தவள் என்ற தலைப்பில் பேசிய சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிக்கோஷ்டி வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது. சிறந்த விவாதப் பிரிவாளனுகத்தெரிவு செய்யப்பட்ட சென்ற். பற்றிக்ஸ் கல்லூரிமாணவன் செல்வன் எஸ் ரி. ஆர். வேதநாயகம் வெற்றிக்கிண்ணத்தையும் "சேவை" என்ற தலைப்பில் பேசிய பரி. யோவான் கல்லூரி இன்ரக்கழகத் தலைவர் செல்வன் குணரத்தினம் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பரிசில்களை யாழ். ரோட்டரி இளைஞர் சேவை இயக்குனர் ரோட்டேறியன் பா, சோ பாரதி வழங்கினுர்.

செல்வன் கனகராசா நன்றி கூறினுர்.

## யாருடையது?

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த திரு. கு. சண்முகராசா என்பவர் 86 ஸ்ரீ 8486க்குரிய இன்சூரன்ஸ் சேர்ட்டிபிக்கற்றைக் கண்டு எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## முரண்பாடுகளை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறுர்கள் என்பதும், ஒரு பிரச்னையை ஒரு பெண் பார்ப்பதற்கும், ஒரு ஆண் பார்ப்பதற்கும் இடையில் நிச்சயமாக வேறுபாடு உண்டு என்பதும் முக்கியமானது. சோகினாவினுல் இந்த இடைவெளி நிரப்பப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குப் பிரபல எழுத்தாளரும் கல்லூரி அதிபருமாகிய திரு த சண்முகசுந்தரம் தலைமைதாங்கினுர். ஏழு மங்கல மங்கையர் மங்கல விளக்கேற்றியதைத் தொடர்ந்து, கவிஞர் திரு. செ. கதிரேசர்பிள்ளை ஆசியுரை நிகழ்த்தினுர். மயிலங்கூடலூர் பி. நடராசன் வரவேற்புரை நிகழ்த்த திரு க. உமாமகேஸ்வரன் வெளியீட்டுரை நிகழ்த்தினுர். திரு. செ. இராஜகுலேந்திரன் நூலை அறிமுகம்செய்தார். ஆய்வாளர்களாக புலோலியூர் இரத்தினவேலோன் திரு. சு. இராஜநாயகம், திரு. வெ. முருகபூபதி ஆகியோர் கலந்துகொண்டனர். நூல் ஆசிரியையின் பதிலுரையைத் தொடர்ந்து திரு. செ. சிவசுப்பிரமணியம் நன்றி கூறினுர்.

திரு பொன். சோமசுந்தரம், திரு. பொ. சிவஞானசுந்தரம் ஆகியோர் இவ்விழாவின் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

## பருத்தித்துறை ஹாட்லியில் நடந்த போட்டிகள்

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க வெள்ளிவிழாவையொட்டி நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் ஆட்டத்தில் பழையமாணவர் கிரிக்கெட் குழு வெற்றியீட்டியது.

இப்போட்டியில் கல்லூரியின் கிரிக்கெட் கோஷ்டியும் பழைய மாணவர் கிரிக்கெட் கோஷ்டியும் மோதிக்கொண்டபோது முதலில் துடுப்பெடுத்தாடிய பழைய மாணவர் கிரிக்கெட் கோஷ்டி 13 - 4 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றன பின்பு துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரிக் கோஷ்டி தனது விக்கட்டுகளை 15-4 ஓவர்களில் 33 ஓட்டங்களை இழந்தது பழைய மாணவர் கிரிக்கெற் கோஷ்டி வெற்றியீட்டியது.

### திருமணமாகதோர் வெற்றி

பழைய மாணவர்களுக்கான வரதட்டப் போட்டியில் திருமணமானவர் கோஷ்டியை திருமணமாகாதவர் கோஷ்டி வெற்றியீட்டியது. அதில் கரு மணமானவர் கோஷ்டியை 15 : 13, 11 : 15, 15 : 14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது.

### வெற்றி தோல்வி இல்லை

பிற்பகலில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஹாட்லிக் கல்லூரிக் கோஷ்டியும், ஹாட்லிக் கல்லூரி பழையமாணவர் கோஷ்டியும் மோதியபோது ஹாட்லிக்கல்லூரி கோஷ்டி சார்பில் செல்வன் கே. அசோகன் ஒரு கோலைப் போட்டார். பழைய மாணவர் கோஷ்டி சார்பில் திரு. எஸ். ஜோதிரவி ஒரு கோலைப் போட்டதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கல்லூரியின் பழைய மாணவர் கோஷ்டிக்கும், கல்லூரிக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் பழைய மாணவர் கோஷ்டி கல்லூரிக்கோஷ்டியை 8 : 2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது. கல்லூரிக் கோஷ்டிக்கு செல்வன் நிச்சாமி தலைமை தாங்கினுர்.

# கங்கா சத்திரச் சந்திக்கடை விவகாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கங்கா சத்திரச்சந்திக் கடை தொடர்பான வழக்கு, மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிப்பதற்காக ஒத்திப்போடப்பட்டது.

இவ்வழக்கு யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திரு. சுந்தரலிங்கம் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் சட்டத்தரணி பத்மநாதன், சட்டத்தரணி செல்வி அபி மன்னசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிர்மனுதாரர் சார்பில் சட்டத்தரணி ஜனூப் சகிட் சட்டத்தரணி எஸ் கே மகேசனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

மனுதாரர் தாக்கல்செய்த மனுவைத் தொடர்ந்து, இக் கடைத்திருத்தவேலையை தடுக்கக்கூடாதுஎன்று யாழ் மாநகர சபை ஆணையாளர் சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோருக்கு நீதிமன்றம் கட்டாணை பிறப்பித்திருந்தது.

எதிர் மனுதாரர் சார்பில் கடந்த தவணை பதில் அணைக்கப்பட்டது. நேற்று மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்ய அவகாசம் கேட்கப்பட்டதைத் தொடர்ந்து மார்ச் 23ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது (ஈ)

# மோட்டார் சைக்கிள்விபத்து 7 வயதுச்சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலையிலிருந்து நண்பகல் தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த 7 வயதுச் சிறுவன் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்தான்.

நேற்று நண்பகல் யாழ் நீதிமன்றத்திற்கு முன்பாக இச்சம்பவம் நடந்தது.

யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் முதலாம் வகுப்புப் படிக்கும் கணேசன் கபிலன் என்ற இச்சிறுவன், வீடுசெல்லும்போது மோட்டார்சைக்கிளில் மோதப்பட்டு தலையிலும் வாயிலும் காயமடைந்தான்

அவ்விடத்தில் ஐந்தாறு டாக்ஸிகளும், கார்களும்நின்ற போதும், தனியாகவந்த அச்சிறுவனை உடனடியாக எவரும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முன்வரவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

சிறிதுநேரத்தில் தாயாருக்கு அறிவிக்கப்பட்டு, தாயார் ஒரு டாக்ஸியில் வந்தபோது அங்கு நின்ற ஒருவர் சிறுவனைத் தனியார் ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்லுமாறு தாயாரிடம் கூறி அவரும் டக்ஸியில் ஏறிக்கொண்டார். மோட்டார் சைக்கிளில் வந்தவரும் அவர்களுடன் சென்றார். (ஈ)

## பரீட்சைப் பெறுபேறுகள்

[கல்வியங்காடு]

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் யாழ். மாவட்டத்தின் சகல பாடசாலைகளுக்கும் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


# கேள்வி அறிவித்தல் 1984

கீழே குறிப்பிடப்படும் கடைகளுக்கு சீலவைத்த கேள்விகள் 14-03-84ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட்டு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களும், தேவையான விபரங்களும் அந்தந்த உப அலுவலகங்களில் 13-02 84ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | கடைகளின் எண்ணிக்கை | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக் குறைந்த கேள்வி ஒவ்வோர் கடைக்கும் | கேள்வி வைப்பு | கேள்விப்பத்திர பணம் |
|---|---|---|---|---|
| 01, பண்டத்தரிப்பு பட்டினம் | | | | |
| நவீன சந்தை வெளிப் புறக்கடை (2,3,) | 2 | 25000.00 | 250.00 | 25.00 |
| நவீனசந்தை உட்புறக் கடை | 4 | 20000.00 | 250.00 | 25.00 |
| 02. காங்கேசன்துறை உப அலுவலகம் | | | | |
| சந்தைக்கடைகள் வெளிப் புறம் | 4 | 3000.00 | 100.00 | 15.00 |
| 03. நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| இராஜகிராமம் | 2 | 500.00 | 100.00 | 10.00 |
| 04. நயினாதீவு உப அலுவலகம் | | | | |
| சந்தைக்கடை | 3 | 250.00 | 100.00 | 10.00 |
| 05, சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| தொல்புரம் மத்திய சந்தைக் கடை | 1 | 250.00 | 100 00 | 10.00 |
| சுழிபுரம் புதிய கடை | 6 | 20000.00 | 250.00 | 25.00 |
| 06. கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| கோப்பாய் சந்தைக்கடை | 8 | 500.00 | 100.00 | 10.00 |
| 07. அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| சந்தைக் கடை | 1 | 3000.00 | 100.00 | 15 00 |

தேவநேசன் நேசையா
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.

யாழ். அபி. சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
24-02-84.

1077



# PAPER CLASS 1984 (AUGUST)

ஆரம்பம்: 3-3-84 சனி பிற்பகல் 1 மணி

1-00—2-00 Botany
2-00—3-00 Zoology
3-00—4-00 Chemistry
4-00—5-00 Physics

## 86 A/L WEEKEND CLASS

ஆரம்பம்: 3-3-84 சனி நண்பகல் 12 மணி

## DAY CLASS A/L 1984 (AUGUST)

4-வது பிரிவு

ஆரம்பம்: 5-3-84 திங்கள் காலை 9 மணி

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. ஜெகன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாகநாதன்
Pure / Applied Maths: திரு. கிருஷ்ணா

## தூய பிரயோக கணிதம்

ஆரம்பம்: 5-3-84 திங்கள்

7-00—8-00 புள்ளி விபரவியல்
8-00—9-00 உராய்வு
10-00—11-00 தொடர்பு வேகம்
11-00—12-00 தொடர்
1-00—2-00 ஆள் கூற்று கேத்திரகணிதம்
2-00—3-00 நீர் நிலையியல்

ஆசிரியர்: திரு. கிருஷ்ணா

விபரங்கட்கு: NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, Jaffna

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-45
7-00, 9-30
Roger Moore in
FOR YOUR EYES ONLY
Scope—Colour—Adults

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-00
எம். ஜி. ஆர். - ராதாசலுஜா
இதயக்கனி
2-3 84 முதல்
BRUCE STRIKES BACK

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
கமல்— ஸ்ரீதேவி— தியா
மீண்டும்கோகிலா
(ஈஸ்மன் கலர்)

**மனோகரா** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
சசிகபூர்-மும்தாஸ்
நடித்த
சோர் மச்சாயே
சோர்
(ஹிந்தி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
9-30
கமலஹாசன்-மாதவி
சுவப்னு-தியாகராஜன்
பாரதிராஜாவின்
டிக் டிக் டிக்
(ஈஸ்மன்கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
பலநாட்களுக்குப் பின்னர்
எம். ஜி. ஆர்.
ரஸிகர்களின் ஆவலைப்
பூர்த்திசெய்ய இதோ அவ
ரின் அற்புதப் படைப்பு
தேவிகா — வீரப்பா
நடித்த
ஆனந்தஜோதி
(புதிய பிரதி)

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15,
4-45, 7-15, 9-30.
Airport 80

**வெலிங்டன்**
தினசரி 10-30, 2-30, 6-00
9-30
ராமராவ் - அஞ்சலிதேவி
லவகுசா
(ஈஸ்மன் கலர்)
பாடசாலை மாணவர்க்கு
விசேட காட்சி
ஒழுங்கு செய்யலாம்
3-3-84 முதல்
IDEAL MARRIAGE
Part II

இன்னும் சில தினங்கள்
மட்டும்
**றீகல்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15
சோகன்...
திருமதி பாக்யராஜ்...
பயணங்கள்
முடிவதில்லை
- வண்ணம் -
Coming
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
JANWAR
- Color -
Music - Shankar
Jaikishan


# கலை இலக்கிய வட்டம்

(யாழ்ப்பாணம்)

'கலை இலக்கிய வட்டம்' ஒன்று கோண்டாவிலில் ஆரம்பம் செய்யப்பட்டது. பின்வருவோர் வட்டத்தின் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆர். சந்திரானந்தன், செயலாளர்: மா. விக்னேஸ்வரன், பொருளாளர்: எஸ் சிவபாலன், மக்கள் தொடர்பாளர்: த தர்மலிங்கம், கலைத்துறை எஸ். செல்வகுமார், இலக்கியத்துறை வி. மாணிக்கவாசகர், கணக்காய்வாளர் க. குகன்.

# பின்னுறுதிக்கட்டளை மற்றிய அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற இணுவில் மேற்கைச்சேர்ந்த சின்னத்தம்பி கந்தையாவின் மரண சாதனம் இல்லாத சொத்துக்கள் விடயமாக.

(மரணமெய்தியவர் மரணச்சொத்து நியாயாதிக்கம்) இல.3775

கந்தையா கருணனந்தன் இணுவில் மேற்கு, இணுவில். மனுதாரர்

எதிராக

1. கந்தையா கைம்பெண் கனகம்மா
2. கந்தையாசதானந்தன்
3. கந்தையா ஆனந்த பாஸ்கரன்
4. கந்தையா ஆனந்த கேதீஸ்வரன்
5. கந்தையா வித்தியானந்தநங்கை
6. கந்தையா சத்தியானந்தநங்கை- 18வயது பராயமற்றவர்
7. கந்தையா சத்தியானந்தன் -15 வயது பராயமற்றவர்

6ம், 7ம் எதிர்வாதிகள் பராயமற்றவர்களாயிருப்பதால் தங்கள் வழக்குப் பாதுகாவலர் 1ம் எதிர்வாதிமூலம் தெரிபடுகின்றனர். எல்லோரும் இணுவில் மேற்கு, இணுவில்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் வழக்குத் தொடுக்கும்படி அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே மேற்குறித்த எதிர்வாதிகளோ அல்லது அக்கறையுள்ள எவரேனும் 1984ம் ஆண்டு பங்குனி மாதம் 9ந் திகதி காலை 9 மணிக்கு இம்மன்றில் தோன்றி பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றிய கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984ம் ஆண்டு மாசி மாதம் 10ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்

தயாரித்தவர்:
அ. சொக்கலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
1054


**ஹரன்** (யாழ். நகர்)
கோஜி, ஸ்ரீப்பிரியா,
வசந்தத்தில் ஓர்நாள்
(ஈஸ்மன் கலர்)

**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி 2-30 6-00
சௌகார் - விஜயா
சத்திய சுந்தரம்


# தலைவராகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி சமூகத்தொழில் சேவை நிலையத்தின் சமநலச் சேவைக் குழுவின் தலைவராக திரு. ந. பிரணவசொரூபன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். குழுவின் உறுப்பினர்களாக திரு. கு. க. நடராஜன், திரு ஆ. அருணைநாயகம், திரு. எஸ் அரசரத்தினம், திரு. எஸ். கதிரவேலு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வண்-நிரு)

# சமநல சேவை நிலையம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் பகுதியில் சமநல சேவை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கென ஒன்றரை லட்சம் ரூபா பன்முக வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ளது.

# பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் இல. 9 கச்சேரி கிழக்கு ஒழுங்கையைச் சேர்ந்த டாக்டர் செல்லையா தயானந்தன் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் தயானந்தன் கைம்பெண் பாலசுசீலா, இல. 9 கச்சேரி, கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

— மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல.த/3765

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1984-ம் ஆண்டு பங்குனி மாதம் 8 ஆந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்
பதிவாளர்.

1984-ம் ஆண்டு தை மாதம் 10 ஆந் நாளாகிய இன்று தெரிவிடப்பட்டது.

மனுதாரின் சட்டத்தரணி
அ. மரியாம்பிள்ளை
25/1, 4ம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். 1055

# சமாதான முயற்சி

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்குழு தற்போது இப்பகுதியில் நடைபெற்றுவரும் சிறுகுற்றங்களை விசாரணை செய்து சமாதானமாக தீர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது

யாழ் பொலிஸ் பகுதியினரால் அனுப்பி வைக்கப்படும் முறைப்பாடுகளையும் இப்பகுதியிலுள்ள மக்களால் செய்யப்படும் புகார்களையும் மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் குழுத்தலைவர் திரு. பி. அன்ரனி பெர்ணண்டோ தலைமையில் இக்குழு விசாரணை செய்து சமாதானமான முறையில் தீர்த்து வைக்கின்றது. (கு)

# வருடாந்த விழா

(கல்விளான்காடு)

கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தின் வருடாந்தவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாணவர் தலைவிகளுக்கான விருதுகளை யாழ். பேராயர் பங்குத்தந்தை எஸ். ஜெபநேசன் அடிகள் வழங்கினார் விழா வித்தியாலய அதிபர் வலன்ரைன் சகோதரி தலைமையில் நடைபெற்றது.

# யாழ். மாவட்ட 'தமிழ் ஒலி' நிகழ்ச்சிகள்

(மானிப்பாய்)

'தமிழ் ஒலி' யாழ். மாவட்ட மன்ற உறுப்பினர்கள் அளிக்கவிருக்கும் 'இளம் சுடர்' நிகழ்ச்சியினை இன்று முதல் ஒவ்வொரு வியாழனும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்சேவை ஒன்றில் இரவு 7 மணி - 7.30 மணிவரை கேட்கலாம் நான்கு வாரங்களுக்கு இந் நிகழ்ச்சி நடைபெறும்.

# சங்கானை வைத்தியசாலை நிலை!

(சங்கானை)

சங்கானை அரசினர் வைத்தியசாலை கடந்த இருவருடங்களாக வைத்திய அதிகாரியின்றி இயங்கிவருகின்றது.

இரு உதவி வைத்தியர்களுடன் இயங்கிவந்த இவ் வைத்தியசாலையில் இப்போது ஒருவரே கடமையாற்றுகிறார். இதன் காரணமாக இவ்வைத்தியசாலையில் மாலையில் வெளி நோயாளர்களைப்பார்வையிடும் கடமைகள் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பெரிதும் கஷ்டத்துக்குளாகின்றனர் வைத்தியசாலையின் நிலைமை மீண்டும் சாதாரண நிலைக்கு கொண்டுவருமாறு சங்கானையிலுள்ள அபிவிருத்திச் சங்கங்கள் யாழ். சுகாதார சேவை அத்தியட்சகருக்கு மகஜர் ஒன்றைத் தயாரித்து வருகின்றது.

# 90 குடும்பங்கள் வீடு இழந்தன

(புலோலி)

புலோலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கொற்றாவத்தை, புற்றளை, பல்லப்பை துறையாமூலை, சாரையடி, மந்திகை, நேவரன், காந்தியூர், கம்பாவத்தைக் கிராமங்கள் அண்மையில் ஏற்பட்ட மழையினாலும் வெள்ளத்தினாலும்பாதிப்படைந்துள்ளன.

இக்கிராமங்களில் பாதிப்படைந்தவர்கள் பற்றிய விபரங்களைக் கிராம சேவையாளர் திரு, எஸ். வேலாயுதபிள்ளை திரட்டி வருகிறார். இப்பகுதிகளில் உள்ள 90 குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளன. 150 குடும்பங்கள்பாதிப்படைந்துள்ளன. சுமார் 450 செம்மறி ஆடுகள் இறந்துள்ளன செம்மறி ஆடுகள் மட்டும் இறந்தமையால் இப்பகுதி மக்களுக்கு சுமார் 90,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

---

அக்குவையனஸ் சர்வகலாசாலை
கணக்கியல் மாணவன்

# அமரர் வசந்தகுமார்

| உலகில் உதித்த தினம் | கந்தன் கழலடிகளில் சரணடைந்த தினம் |
|---|---|
| 02-04-1949 | 01-03-1973 |

காசி விசாலாக்ஷி சமேத காசி விஸ்வநாதனும்
அட்கொள்ளப்பட்டு நல்லைக்கந்தன் தாமரை மலரடிகளில்
இன்று பதினேராண்டுகள் நிறைவெய்தி மகிழும்
எங்கள் உயிரேமைந்தா! எங்கள் உணர்வே அண்ணு!
அறிவொளி நிறைந்த நின் இதயத்தின்
அமுத அன்பை அருளொளி வீசும் கண்களால் காட்டி
அள்ளிக்கொடுக்கும் நின் அருமைத் திருக்கரங்களால்
எம்மை ஆரத்தழுவி எங்கள் உலகமே நீயென்பாயே
நின்திருமலர் பாதகமலங்களைப் பக்தியுடன்
பணிந்து நிற்கின்றோம்
காத்தருள் பொழிவாயப்பா
நினைவே தப்பி வாழும்
அப்பா, அம்மா, தங்கை ஜொபி,
தங்கை றூபி, பெரியம்மா,
உற்றார், உறவினர், நண்பர்கள்.
(1010)


# விற்பனை

## லங்கா சீமெந்து

காங்கேசன்துறை லங்கா சீமெந்து தொழிற்சாலையில் சீமெந்து விற்பனை 27-02-84 முதல் ஆரம்பமாகியுள்ளது.

சீமெந்து தேவைப்படுவோர் காங்கேசன்துறை-கீரிமலை றோட்டில் உள்ள தொழிற்சாலையின் நுழைவினூடாக வந்து விற்பனை அதிகாரியினுடன் தொடர்பு கொண்டு, எவ்வளவு தொகையேனும் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

50 Kg. சீமெந்து பைக்கெட் ரூபா 93/-

சீமெந்து பைக்கெட்டில் அடைக்கும் நேரம்= காலை 7-00மணி முதல் இரவு 10-00 மணி வரை

மேலும் விபரங்கட்குத் தொடர்புகொள்ளவும்:-

விற்பனை அதிகாரி
லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை.

28-2-84. 1075

## வட்டக்கச்சி கொலை வழக்கு:

# பிணை ரத்து; எதிரிகள் மூவருக்கும் விளக்கமறியல்

[யாழ்ப்பாணம்]

வட்டக்கச்சிக் கொலை வழக்கில் எதிரிகள் மூவருக்கும் வழங்கப்பட்டிருந்த பிணை ரத்துச் செய்யப்பட்டு, விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் இவ்வழக்கு எடுக்கப்பட்டபோது நீதிபதி திரு. கே. சந்திரவேற்பிள்ளை எதிரிகளின் பிணையைத் தாம் ரத்துச் செய்வதாகத் தெரிவித்து விளக்கமறியலில் வைக்கப்படவேண்டுமென்று உத்தரவிட்டார்.

வட்டக்கச்சியைச் சேர்ந்த நாகலிங்கம் கனகேஸ்வரன் என்பவர் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 28ம் திகதி கொலை செய்யப்பட்டது தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த வேலன் முருகுப்பிள்ளை, இராமன் பொன்னையா, இராமன் சின்னையா ஆகிய மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு சுமார் 3 மாத காலத்தின் பின்னர் கிளிநொச்சி நீதிபதியால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதன் பின்னர் இவ்வழக்கில் பொலிஸ் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா எதிரிகளை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுமாறு நீதிமன்றத்தில் விண்ணப்பித்திருந்தார்.

எதிரிகள் கொலைக் குற்றச்சாட்டை எதிர்நோக்குவதால் நீதவான் நீதிமன்றம் அவர்களை விளக்கமறியலில் வைக்கவே அதிகாரம் கொண்டுள்ளதென்றும், அவ்வதிகாரத்தைப் பிரயோகித்து மீண்டும் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் அவர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இதை ஆட்சேபித்த எதிரி தரப்புச் சட்டத்தரணிகள், வேறு நீதவான் நீதிமன்றங்களிலும் கொலைவழக்குகளில் எதிரிகளைப் பிணையில் செல்ல நீதவான்கள் உத்தரவிட்டுள்ளனர் எனச் சமர்ப்பித்தனர். அத்துடன் ஒரு நீதிமன்றம் இட்டுள்ள கட்டளையை அந்நீதிமன்றமே மாற்றியமைக்க சட்டத்தில் இடமில்லையென்றும் சமர்ப்பித்தனர்.

எதிரிதரப்புச் சட்டத்தரணிகளின் எழுத்துமூலமான சமர்ப்பணங்களும் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இது தொடர்பான கட்டளைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நீதிபதி தமது கட்டளையில் எதிரிகளை கொலைக்குற்றச்சாட்டுத் தொடர்பாக விளக்கமறியலில் வைக்குமாறு கோரப்பட்டிருப்பதனால் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட பிணையை தாம் ரத்துச்செய்வதாகவும், எதிரிகள் மேல்நீதிமன்றுக்கே பிணை கோரி விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் எஸ். அம்பிகைபாலன், த. ஸ்ரீபதி, பொ. வெற்றிவேலு ஆகியோரும், பொலிஸ்தரப்பில் சட்டத்தரணிகள் என். ஸ்ரீகாந்தா, ரி. ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் ஆஜராகியிருந்தனர். (கு)

## பகிரங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதென்றும் கூறினார்.

இறந்தவர் தம் வீட்டில் நிரந்தரமாகத் தங்குவதில்லையென்றும், இடைக்கிடை வந்துபோவாரென்றும், அண்மைக் காலத்தில் வீட்டுக்கு அவர் வரவில்லையென்றும் தெரிவித்தார்.

நேற்றுக்காலையில் மனிதச் சடலம் கிடப்பதாக அறிந்து வந்து பார்த்ததாகவும் அவர் கூறினார்.

பருத்தித்துறை நீதவான் திரு கே. கணபதிப்பிள்ளை விசாரணை நடத்தினார். பருத்தித்துறை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு கொந்தசமகே தலைமையிலான பொலிஸ்குழு விசாரணைகளை நடத்திவருகின்றது. சடலம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பிரேதஅறைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இவரது சடலத்தை யாழ். ஆஸ்பத்திரி பிரேதஅறையில் வைத்து சட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தார்.

இறந்தவரின் தலையிலிருந்து ஒரு குண்டு மீட்கப்பட்டதாகவும், மற்றும் அடிகாயங்களும் காணப்பட்டதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## இது கதையல்ல...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பிலீடுபட்டிருந்தனர்.

வங்கிக்குள் பணம் கொண்டு செல்லப்பட்டதும் பாதுகாப்பாகவந்த பொலிசார், பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிவிட்ட சில மணி நேரத்தில் வங்கிப் பாதுகாப்பு அதிகாரியின் கைத்துப்பாக்கியை இரு இளைஞர் பறித்துச்சென்றுள்ளனராம்.

உதவிப் பொலிஸ் அதிபரின் சகோதரராக இருக்கும் இவர், கைத்துப்பாக்கியை இடுப்பில் காற்சட்டையில் சொருகிவைத்திருந்தாராம். அந்தநேரம் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களில் ஒருவர் 'லபக்' என்று அவரின் இடுப்பிலிருந்து கைத்துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டுதலைமறைவாகிவிட்டதாக பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது

யாழ் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் எவரும் இது சம்பந்தமாகக் கைதுசெய்யப்படவில்லை. (மா)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிமுத்து செல்லப்பா

உரும்பராய் கிழக்கு திருமதி ஆச்சிமுத்து காலமாகிவிட்டார். அன்னார் உரும்பராய் கிழக்கு காலஞ்சென்ற கா. செல்லப்பாவின் அன்புமனைவியும், மகேசியா செல்லத்துரை, இராசதிரவியம், பரமேஸ்வரி, லண்டன் தேவராசா, வளர்மதிதேவி, சிவலோகேஸ்வரியின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி, மகேஸ்வரி, கதிரேசபிள்ளை, பரமநாதன், தவமலர், உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் ஆறுமுகதாஸ் ஆகியோரின் மாமியும், சிவசுப்பிரமணியம், இலட்சுமிப்பிள்ளை, கந்தையா ஆகியோரின் சகோதரியுமாவர். ஈமக்கிரிகைகள் இன்று வியாழன் [1-3-84] காலை 10 மணிக்கு இளங்காட்டு மயானத்தில் நடைபெறும்.

1087

## மரண அறிவித்தல்

### திருமதி துரையப்பா பாக்கியம்

(திருநெல்வேலி)

திருமதி துரையப்பா பாக்கியம் காலமாகிவிட்டார். இவர் ராஜசபா, செல்லக்கண்டு, ஆனந்தராசா ஆகியோரின் அன்புத் தாயாராவர். ஈமக்கிரியைகள் இன்று [வியாழக்கிழமை] பி ப. இரண்டு மணிக்கு நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

செல்லக்கண்டு

வளாக ஒழுங்கை, திருநெல்வேலி.

1090

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளிப்பிள்ளை நடராசா

திருமதி வள்ளிப்பிள்ளை நடராசா காலமானார். இவர் இணுவிலையைச் சேர்ந்த காலஞ்சென்ற கலாவன் பென்சனியர் திரு. சி நடராசா அவர்களின் அருமை மனைவியும், புவனேஸ்வரி, செகிதாதேவி [தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை], அருந்தவராசா, பத்மராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், குருகுலசிங்கம், சந்தசாமி, தில்லைநாதன் (ஸ்ரீமுருகன் ஜுவலர்ஸ் உரிமையாளர், சுன்னாகம்), மங்கையர்க்கரசி (ஆசிரியை) ஆகியோரின் அருமை மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [1-3-84] பிற்பகல் 2 மணிக்கு பத்தாவத்தை இளவாலையில் நடைபெறும்.

1093

## கடும் மழையினால் விவசாயிகள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று எதிர்பார்த்ததற்குக் குறைவாகவே மழைபெய்தது.

ஆனாலும் இவ்விரு மாவட்டங்களிலும் காலநிலை பாதகமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த இரு நாட்களாக இவ்விரு மாவட்டங்களிலும் பெய்த கடும் மழையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை ஆகிய இடங்களில் கடும் மழை பெய்தது.

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவில் 321 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இன்று கடும்மழை பெய்யுமென்று அறிவிக்கப்பட்டது.

## யுத்தத்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

"யுத்தம் ஒன்றை நமது நாடு எதிர்நோக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். இந்த நிலையில் கண்ணை மூடிக்கொண்டிருக்க முடியாது.

(இ-கு)

## பொலிசாருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் சன்மானமும், இரு சம்பள உயர்வுகளும் வழங்கப்பட்டதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (மா)

## ஒரு இரும்புப்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றன. வான் டயர்கள், காற்றில்லாத நிலையில் இருக்கின்றன. மற்றொரு வானும் 'காஸ் சிலிண்டர்'களும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (மா)

## பத்து இளைஞர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இருநூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் நடத்திய திடீர்ச் சோதனையைத் தொடர்ந்து கைதான பத்து இளைஞர்களும் நேற்று மாலைவரை விடுதலை செய்யப்படவில்லை.

## மானியக்குழு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விபரங்களை யாழ். பல்கலைக்கழக உபவேந்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியணித்துள்ளார்.

## யாழ். ஆஸ்பத்திரி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இதே நேரத்தில் பண்ணையில் இருதிகள் முகாமாக இயங்கிய அறைகள் விடுதியிலும் 2,935 ரூபா பெறுமதியான மருந்து வகைகள் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)


## ஊழியர் நம்பிக்கை நிதிப் பிரிவு

(கொழும்பு)

ஊழியர் நம்பிக்கை நிதிப் பிரிவுச் சபை அதன் ஊழியர்களுக்காக மரண சகாய நிதித் திட்டத்தையும், காப்புறுதித் திட்டத்தையும் ஏற்படுத்தவுள்ளது.

இத்திட்டங்களுக்கு ஊழியர்கள் பணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. மரண சகாய நிதித் திட்டத்தின் பிரகாரம் ஊழியரொருவர் இறந்தால் அவரின் குடும்பத்திற்கு ஒரு தொகைப் பணம் நிதியுதவியாக வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்



### திருமதி வைத்திலிங்கம்செல்லம்மா

வண்ணார்பண்ணை நீராவியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்புத் துணைவியும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் பணிகளில் நீண்டகாலம் ஈடுபாடு கொண்டிருந்த சைவமூதாட்டியுமான திருமதி செல்லம்மா அவர்கள் நேற்று சிவபதமடைந்துவிட்டார். இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியரும், தற்போது நைஜீரியாவில் பணிபுரியும் திரு. இரகுநாத முதலியாரின் அருமைத் தாயாரும், திருமதி சாந்தாதேவியின் அன்பு மாமியாரும், திலீசகண்ணன், அங்கயற்கண்ணி, பங்கயற்செல்வி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (1 3 84) பிற்பகல் 3-00 மணியளவில் அன்னாரது யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 89ம் இலக்க இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றாரும், உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்:

தகவல்:

திருமதி சாந்தாதேவி இரகுநாதமுதலியார்.

1094

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984—ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Eelanadu-P. O. Box 49. Telegram: Eelanadu. Telephone: 22389—24 26